**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**
**Uni5 பக்த விஜயம் - 75. ஸ்ரீமதி. சாந்த சக்குபாய் அம்மையார்**

**<u>இவரது வாழ்க்கை உணர்த்தும் உண்மைகள்:</u>**

* இறைவனை அடைய இல்லறம் தடையே இல்லை.

* பாவ பக்தியுடன் கூடிய நாம ஜெபமும் சங்கீத வழிபாடும் இறைவனை நம்முள் எளிதில் உணரச் செய்யும் மார்க்கங்கள்.

* பொறுமையின் மூலம் முன் ஜென்ம வினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

* பொறுமையின் மூலம் அன்பையும் அதன் மூலம் அனைவருடனான நல்வாழ்வையும் மனிதன் சமூஹத்தில் ஏற்படுத்த முடியும்.

* பெண்களுக்கு ஆன்மீகம் மிகவும் எளிதில் கைகூடும்.

* அந்தரங்க பக்தி மூலம் ஈஸ்வரனை எவரும் லயிக்க முடியும்.

* ஆன்மீக வாழ்க்கை முன் ஜென்ம சங்கல்பத்தின் படியே அமையும்.

**சாந்த சக்குபாய்**
சாந்தம் என்றால் அன்பும் பொறுமையும் பணிவும் அடக்கமும் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளும் உன்னத சரணாகதத் தன்மையும் ஆகும். இவை அனைத்தும் பெற்றவர் சக்குபாய். மேலும் தன் பிறவியை சாந்தம் செய்து முக்தியில் லயித்தால் சாந்த சக்கு பாய் ஆனார்.

ஊர்: பண்டரீபுரத்துக்கு அருகில் உள்ள ச்ருஞ்சிருணிபூர்

பெற்றோர்: கங்காதர ராவ் - கமலா பாய்

குரு: பாண்டுரங்கனே வயோதிக ரூபத்தில் குருவாகிறார்.

கணவர்: மித்ரு ராவ்

கணவரின் ஊர்: சிந்து சமவெளியில் ஒரு க்ராமம்

இவர் காலத்து அன்பர்கள்: கபீர், ஞானேஸ்வர் மற்றும் நாம தேவ் ஆகியோர்

இவரது வாழ்க்கை அழகிய திரைப்படமாக வந்துள்ளது.

**வாழ்க்கையின் முக்கிய ஆன்மீக நிகழ்வுகள்:**
**உண்மையான வீட்டைக் கட்டப்பார்...**
மிகச் சிறிய வயதில் மணல் வீடு கட்டி விளையாடும் போது முதியவர் வடிவில் வந்த பாண்டுரங்கன் அதை இடிக்கிறான்.அதற்காக இவர் மிக்க சினம் கொள்கிறார்.அப்போது உண்மையான வீடு முக்தி என்றும் அதை சேவை-பக்தி மூலம் எழுப்ப வேண்டும் என்றும் அறிவுரை கூறினார் ஈசன்.

அதற்கு உரிய மூலப்பொருள் அஷ்டாக்ஷர மந்த்ரம் என்று அதை உபதேசித்து, ஏக் தாரா இசைக் கருவியையும் அளித்து அபங்கம் பாடும் வரகவித் தன்மையையும் சக்குபாய்க்கு அளித்தார்.

**தள்ளிப் போன கல்யாணம்**
முதியோரின் அறிவுரை மூலம் தன்னுள் ஆன்மீக எழுச்சி பெற்ற சக்குபாய் சாதாரணப் பெண்களில் இருந்து அனைத்து விஷயங்களிலும் மாறுபடுகிறார்.அதன் பக்க விளைவு அவருக்கு ஊருக்குள் பேய்-பைத்தியம் போன்ற அவ பட்டங்கள். யாரும் அவரைக் கல்யாணம் செய்ய முன் வரவில்லை.

மித்ரா ராவ் என்ற இளைஞன் இவரைக் கல்யாணம் செய்து கொண்டான்.அதுவும் பூர்வ ஜென்ம சங்கல்பமே.இவர் மூலம் அவன் தன்னை ஆன்மீக வாழ்வில் ஈடுபட சங்கல்பம் செய்தான்.சக்குபாயைத் தன் ஊருக்கு அழைத்துச் சென்றான்.

இல்லறமே நல்லறம்
ஆன்மீக வாழ்வில் இல்லறத்தின் மூலம் பல அன்பர்கள் மிக உயர்ந்த ஆத்ம ஞானத்தை அடைந்ததைச் சக்குபாய் அறிவார்.அதனால் மிகவும் அன்பாகவும் அனைவரையும் அரவணைத்துத் தன் இல்லறக் கடமைகள் செய்தார்.மாமியார், நாத்தனார் மற்றும் கணவனின் அன்பைப் பூர்ணமாகப் பெற்றார்.

வ்ரக்தி வந்த போது...
காலம் போகப் போக இவரது மனம் ஆத்ம ஞானத்தை ஏகாந்தத்தில் தேடி லயிக்கும் சமாதியிலும் பாவ பக்தியிலும் விரும்பியது.தன் வீட்டுக் கடமைகள் செய்வதுடன் சேர்த்து, கோபிகைகள் போல இறை த்யானத்திலும் அவர்

ஈடுபடுகிறார்.அடிக்கடி சமாதி நிலைக்குச் சென்று விடுவார்.அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை அவரது புக்ககத்தாரால்.இதனால் வீட்டினுள்ளும் வெளியிலும் இவருக்கு சித்த ப்ரம்மை பிடித்ததாகப் பெயர் வந்தது.

சீரான பயிற்சி இல்லாமல் சமாதி நிலைக்கு இவர் செல்வதும், அதில் இருந்து மீள முடியாமல் தவிப்பதும், பின்னர் மிகவும் கஷ்டப்படுவதும் சாதாரண பெண்களில் இருந்து இவரது வாழ்வை வேறுபடுத்தியது.இதன் மூலம் தம்பதிகளுக்கு இடையே மனக்கசப்பும் உண்டானது.மாமியாரின் நாத்தியின் கொடுமைகளும் அதிகம் ஆயின.

குளத்தருகில் வந்த முதிய குரு
சக்குபாயின் தன்மையை உணர்ந்த பாண்டுரங்கன் அவரது ஊரில் குளத்தில் நீர் எடுக்கும் போது முதிய குருவாக வந்து அவருக்கு உரிய முறையில் தீட்சை அளித்து, அவரது சமாதி நிலையை ஒழுங்கு செய்து சில முக்கிய ஆன்மீக போதனைகளையும் செய்தார்.அதன் மூலம் இவர் தெளிந்த சிந்தையுடன் மீண்டும் இல்லறத்தில் ஈடுபட்டார்.

பண்டரீபுரம் சென்ற சக்குபாய்
போகப் போகத் தன் பெண்மையின் மீது பிடிப்புகள் தீர அவருக்கு சதா பண்டரீபுர த்யானம் ஏற்பட்டது.இதனால் அவரது இல்லற தர்மம் தடைப்படுகிறது.இதை வீட்டாரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.ஆத்ம சுதந்திர தாகம் தீர அவர் சதா பக்தி செய்தார்.

ஆடி மாத ஏகாதசிக்குப் பாண்டுரங்கனை தரிசிக்கத் தன்னை இட்டுச் செல்லுமாறு மித்ரா ராவை வேண்டினாள். அவனோ திட்டி உதைத்துக் கட்டிப் போட்டு விட்டான்.

இடையில் மனம் மாறிய அவன் அவளை விடுவிக்க, கபீர்தாஸ் உட்பட பலர் செல்லும் பண்டரீ யாத்ரையில் கலந்து கொள்ளச் செல்லும் போது மீண்டும் கணவனால் வீட்டில் அடைபட்டாள்.

**சக்குபாயான பாண்டுரங்கன்**
தன் அடையாளத்தை முற்றிலும் துறந்து சதா தன் ஆன்மாவையே இறைவனாக த்யானம் செய்த கட்டத்தில் பாண்டுரங்கன் யாரும் இல்லாத சமயம் பார்த்து இவள் வடிவில் வ'ன்து இவளைப் பண்டரீபூருக்குச் செல்ல வைத்து வீட்டில் இவள் வடிவில் வாழ்ந்தான்.அனைத்து பணிகளையும் செய்தான்.

**"இருப்பது ஒன்று தான், ஒரே சத்யம் தான் அதில் நான் என்ன? இறைவன்**

**என்ன?”** என்ற உயர்ந்த ஞானத்தில் சக்குபாய் வாழ்வதைக் கபீர் போன்றோர் உணர்ந்து அவளைத் தம் கோஷ்டியில் சேர்த்துக் கொண்டனர்.

பண்டரீபூரில் சக்குபாய் தன்னை இறைவனுடன் லயிக்கச் செய்து சதா பல அன்பர் பணிகள் செய்து வாழ்ந்தாள்.

இக்கட்டத்தில் ஒரு முறை இவரைப் பாம்பு தீண்ட அவருக்கு ஒன்றுமே ஆகவில்லை.

காலம் செல்லச் செல்ல தன் மனைவியின் போக்கில் ஏதோ மாறுதலும் உயர்ந்த தன்மையும் இருப்பதை உணர்ந்த மித்ரா தன் சிறு ஞானத்தால் இருப்பது உண்மையில் தன் மனைவி அல்ல என்பதை உணர்ந்து கொள்கிறான்.அப்போது அவனுக்கும் ஈஸ்வர தரிசனம் கிடைத்தது.

தன் மனைவியின் மிக உயர்ந்த ஞானத்தையும் பாவ பக்தியையும் எண்ணி எண்ணிப் பெருமைப் பட்டான்.மாமியும் அதை உணர்ந்தாள். அனைவரும் இறைவனை விடுவித்தனர்.அனைவரும் பண்டரீபூர் சென்று சக்குபாயை அடைந்து அவளுடன் இணைந்து ஆன்மீக வாழ்வை மேற்கொண்டனர்.

*** பாவ பக்தியின் மேலீட்டில் சக்குபாய் சிறிய பாண்டுரங்கனைத் தன் சேலை முந்தானியில் முடிந்து கொண்டு இருப்பாராம்.

*** அவர் வாழ்ந்த வீடும், சாமான்களும் இன்றும் புண்ணிய அடையாளங்களாக உள்ளன.

பெண்கள் ஆன்மீக வாழ்வில் மிகவும் உயர்ந்த நிலையை அடைய முடியும் என்பதை இவரது வாழ்க்கை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது!

ஹரி ஓம்!